அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/92

அரசாங்க நிருவாக,மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்-கொழும்பு.7
1992,ஜனவரி மாதம் 31 ஆந் திகதி

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்,
மாகாண ஆளுநர்களின் செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள்,
அரசாங்க அதிபர்கள் அனைவருக்கும்.

வீடு நிருமாணிப்பதற்கான/பூர்த்தி செய்வதற்கான கடன்
அத்தியாயம் XXIV - தாபன விதிக்கோவை.

வீடொன்றை நிருமாணிப்பதற்கு அல்லது வீடொன்றின் நிருமாணத்தைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு சம்பளக் கடன்களை வழங்கும் வசதியை அளிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

02. இது முழுமையாக ஒரு புதிய திட்டமாகவிருப்பதனால் தாபன விதிக் கோவைக்குச் செய்யப்பட்டுள்ள திருத்தங்களும் சேர்க்கைகளும் கவனமாகப் பின்பற்றப்படலாம்.

03. பின்வரும் சொற்களுக்கு உடனடியாகப் பின்னால் பின்வரும் சொற்களைக் கொண்ட வரியைச் சேர்த்துக் கொள்ளவும்.

பிரிவு 2இல் "கட்டட அமைவிடமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக (பிரிவு 11)"

வீடொன்றினை நிருமாணிப்பதற்காக/பூர்த்தி செய்வதற்காக(பிரிவு 11.16)"

04. உட்பிரிவு 3.17.8இல் உள்ள "கட்டட அமைவிடமொன்றை அல்லது வீட்டுச் சொத்தைக் கொள்வனவு செய்வதற்காக" என்ற சொற்களுக்கு உடனடியாகப் பின்னால் பின்வரும் சொற்களைச் சேர்த்துக் கொள்ளவும்.-

"வீடொன்றை நிருமாணிப்பதற்கான/பூர்த்தி செய்வதற்கான கடன்"

05. பிரிவு 5இல் உள்ள "(1)...........ற்கான கடன்(பிரிவு 11)" என்ற சொற்களுக்கு உடனடியாகப் பின்னால் பின்வரும் சொற்களைச் சேர்த்துக் கொள்ளவும்.

"வீடொன்றை நிருமாணிப்பதற்கான/பூர்த்தி செயவதற்கான கடன் (பிரிவு 11.16)".

06. 11.15.1ஆம் உட்பிரிவுக்கு உடனடியாகப் பின்னால் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்த்துக் கொள்ளவும்.-

"11.16 வீடொன்றை நிருமாணிப்பதற்கான/பூர்த்தி செய்வதற்கான கடன்

..6

தகைமை

பின்வரும் உட்பிரிவுகளுக்கு உட்பட்டு தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவரும் 5 ஆண்டுகளுக்குக் குறையாத ஓய்வூதியச் சேவையை உடையவரும் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவியை வகிப்பவரும் தாமோ அல்லது தமது வாழ்க்கைத் துணையோ அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளோ வீடொன்றைச் சொந்தமாக வைத்திருக்காத நிலையிலுள்ளவரும் தேசிய வீடமைப்பு ஆணையாளரின் வாடகைக் கொள்வனவுத் திட்டத்தின் கீழ் தமது பெயரிலோ அல்லது தமது வாழ்க்கைத் துணையின் பெயரிலோ அல்லது தம்மைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளின் பெயரிலோ வீடொன்றைப் பெற்றுக் கொள்ளாமலிருப்பவருமான உத்தியோகத்தரொருவர் இக்கடனைப் பெறுவதற்குத் தகைமையுடையவராவார்."

"11.16.2 வீடு கட்டப்படவுள்ள அல்லது பூர்த்தி செய்யப்படவுள்ள கட்டட அமைவிடம் உட்பிரிவு 11.1.1 இன்படி இருத்தல் வேண்டும்.

11.16.3 இக்கடன் பின்வருவனவற்றின் பொருட்டு வழங்கப்படமாட்டாது.

(அ) இக்கடனுக்காக விண்ணப்பகாரரினால் அல்லது அவருடைய வாழ்க்கைத் துணையினால் அல்லது அவரைச் சார்ந்திருக்கும் பிள்ளைகளினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் வீட்டுச் சொத்தொன்றின் பிணையின் பேரில் செய்யப்பட்ட எந்த ஈட்டையும் அல்லது கடனையும் மீட்பதற்கு,

(ஆ) விண்ணப்பகாரரினால் அல்லது அவருடைய வாழ்க்கைத் துணையினால் அல்லது அவரைச் சார்ந்திருப்பவரினால் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட வீடொன்றின் தொடர்பில்,

(இ) 11ஆம் பிரிவின் கீழ் கடனொன்றைப் பெற்ற கடனை முழுமையாகத் திருப்பிக் கொடுக்காத உத்தியோகத்தரொருவரின் விடயத்தில்

11.16.4 வாழ்க்கைத் துணைகள் இருவரும் அரசாங்க உத்தியோகத்தர்களாகவிருக்குமிடத்து இந்நோக்கத்திற்காக அவர்களில் ஒருவருக்கு மட்டுமே கடன் வழங்கப்படலாமென்பதுடன் அது ஒரு தடவை மட்டுமே வழங்கவும்படலாம்.

11.17 தொகை கடனின் இத்தொகை ஐந்தாண்டுக் காலச் சம்பளத்திற்கு அல்லது 11.20ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிலுள்ள தொகைக்கு இவற்றில் எது குறைந்ததோ அத்தொகைக்கு மட்டுப்படுத்தப்படலாம்.

"11.18 ஆவணங்கள் வீடு எங்கு கட்டப்படவுள்ளதோ அல்லது நிருமாணம் பூர்த்தி செய்யப்படவுள்ளதோ அக்காணியின் தொடர்பில் இந்த அத்தியாயத்தின் 4.2.3, 11.3, 11.4, 11.4.1, 11.4.2, 11.5, 11.6, 11.7, 11.7.1ஆம் உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதன்படி விண்ணப்பத்துடன் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்."

"11.19 பிற தேவைப்பாடுகள்

11.19.1 அற்றோனித்தத்துவம் கடன் வழங்கப்பட முன் மூன்று பிரதிகளின் படிவம் பொது 265இல் அற்றோனித் தத்துவம் நிறைவேற்றப்படல் வேண்டும். அற்றோனித் தத்துவத்தின் இரண்டு பிரதிகள் பதிவு செய்யப்படுவதற்கும், திருப்பியனுப்பப்படுவதற்குமாக காணி அமைந்துள்ள மாவட்டத்தின் காணிப் பதிவாளரிடம் திணைக்களத் தலைவரினால் உடனடியாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பதிவு செய்யப்படுவதற்காக அனுப்பப்படும் பிரதிகளில் ஒன்றில் 1982ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டத்தின் கீழும் அதன் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் கீழும் விதித்துரைக்கப்பட்டுள்ள பெறுமதிக்கு முத்திரைகள் ஒட்டப்படல் வேண்டும். அற்றோனித் தத்துவத்தின் மூன்றாவது பிரதி ("இணைப் பிரதி" எனக் குறிப்பிடப்படுவது) அது நிறைவேற்றப்பட்ட மாதத்தின் இறுதி வரை திணைக்களத் தலைவரினால் வைத்திருக்கப்படல் வேண்டும். அதன்

6/92.

பின்னர் அடுத்த மாதத்தின் 15ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் சம்பந்தப் பட்ட காணி பதிவாளருக்கு கிடைக்குமாறு பின்னிணைப்பு 28இல் காண்பிக்கப்பட்டுள்ள படிவத்தில் இணைப் பிரதிகளின் தயாரிக்கப்பட்ட சாதனங்களின் நிரலொன்றுடன் ஒவ்வொரு மாதத்திலும் நிறைவேற்றப்பட்ட சாதனங்களின் "இணைப் பிரதி" சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11.19.2 பதிவிற்காக சமர்ப்பிக்கப்படும் அற்றோணித் தத்துவங்கள் தாமதமின்றி உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு தம்மிடம் திருப்பியனுப்பப்படுவதைத் திணைக்கள தலைவர் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். பொதுவாக இந்த நடைமுறைக் கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு வாரங்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். பதிவிற்கு பின்னர் அற்றோணித் தத்துவம் பெறப்பட்டதன் பேரில் வீட்டின் நிருமாண வேலை அல்லது பூர்த்தியாக்கல் வேலை செய்யப்பட்ட காணித் தொடர்பிலான உறுதி யுடனும்/பிற தொடர்புடைய சாதனங்களுடனும் அற்றோணித் தத்துவம் வைத்திருக்கப் படல் வேண்டும்.

11.19.3 வீடு கட்டப்பட்டுள்ள நிருமாண வேலை பூர்த்தி செய்யப்படவுள்ள காணி யின் தொடர்பில் 11.10, 11.11, 11.12, 11.12.1 ஆம் உட்பிரிவில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

11.19.4 இந்த அத்தியாயத்தின் 11.8ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பிணையங்கள் இருத்தல் வேண்டும்.

11.20 கட்டிடத்திற்கான அமைப்பு படங்களும் மதிப்பீடுகளும் பட்டயம் பெற்ற கட்டிட கலைஞர் ஒருவரிடமிருந்து பெறப்பட்டு படிவம் பொது 262(அ)ஆக வகுத்தமைக்கப்பட்ட விண்ணப்ப படிவத்திலுள்ள 11.18ஆம், 11.19ஆம் உட்பிரிவு களில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

11.21 ஏற்கனவே கட்டப்பட்ட பகுதிக்கு ஏதாவது பிற நிறுவனத்திடமிருந்து கடன் பெற்றிருந்து அக் கட்டடமொன்றைப் பூர்த்தி செய்யும் விடயத்தில் அந்நிறுவனத்தி டமிருந்து பெறப்பட்ட கடன் அந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் அற்றோணித் தத்துவம் அந்நிறுவனத்திடம் கையளிக்கப்பட்டமையையும் நிருபிப்பதற்கு அந் நிறுவனத்திடமிருந்து சான்றிதழொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அத்தகைய சந்தர்ப் பங்களில் கட்டடத்தைப் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்படும் கடனுக்காக இரண்டாவது ஈடு ஒன்று நிறைவேற்றப்படல் வேண்டும். அத்தகைய கடனொன்றைப் பெற்ற உத்தி யோகத்தர் கடனின் அறவீடு பூர்த்தி செய்யப்பட்டவுடன் கடன் வழங்கும் அதிகார பீடத்தின் (தொடர்புடைய அமைச்சின்) மூலம் கடன் வழங்கும் நிறுவனத்திடம் அற்றோணி தத்துவம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த இரத்து உரிய காணிப் பதிவகத் தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் கடன் வழங்கும் அதிகார பீடத்திற்கு(தொடர் புடைய அமைச்சிற்கு)இந் நிறுவனம் அறிவிக்க வேண்டுமென அறிவித்தல் வேண்டும்.

11.22 கடனின் விடுவிப்பு வீடொன்றினைக் கட்டுவதற்கான அல்லது பூர்த்தி செய்வ தற்கான கடன் பின்வரும் கட்டங்களில் விடுவிக்கப்பட வேண்டும்.

(1) கட்டட அமைவிடத்தின் முதலாவது பார்வையிடலின் பின்னர்-50%

(11) 50% பூர்த்தி செய்யப்பட்டவுடன்--இரண்டாவது பார்வையிடல்-45%

(111) மதிப்பீட்டின்படி முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர்-5%

11.23 நடுத்தர மட்ட தொழினுட்பச் சேவையின் 11ஆம் தரத்திற்குக் குறையாத தரத்திலுள்ள தொழினுட்ப உத்தியோகத்தரொருவரினால் பார்வையிடல்கள் செய்யப்படும். அத்தகைய உத்தியோகத்தரினால் வழங்கப்படும் சான்றிதழ் அப்பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபரினால் மேலொப்பமிடப்படல் வேண்டும்.

..6

6/92.

11.24 உத்தியோகத்தரினால் எடுக்கப்பட்ட தவணைப் பணத்தொகையின் மீது 7.2% என்ற வீதத்திலேயே வட்டி விதிக்கப்படல் வேண்டும். இக்கடனின் பேரிலான அறவீட்டிற்கு இந்த அத்தியாயத்தின் 3ஆம் பிரிவில் விதித்துரைக்கப்பட்ட அறவீட்டு எல்லையிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

11.25 கடன் எடுக்கப்பட்ட மதிப்பீட்டிலுள்ள சகல வேலை விடயங்களும் முதலாவது தவணைப் பணத்தொகை வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

உபயோகிக்கப்படவுள்ள படிவங்கள் வருமாறு:-

1. இச்சுற்றறிக்கையுடன் படிவம் பொது 262(அ) இணைக்கப்பட்டுள்ளது. இது தான் கடன் விண்ணப்ப படிவமாகும்.

2. படிவம் பொது 263 - இருப்பதைப் போன்ற விண்ணப்பப் படிவம்

3. படிவம் பொது 264 - இருப்பதைப் போன்ற பிணை முறி

4. படிவம் பொது 265 - ஒழிக்க முடியாத அற்றோனித் தத்துவப் படிவம் இத்துடன் திருத்திய படிவம் இணைக்கப்பட்டுள்ளது.

காலப்போக்கில் படிவங்களின் (பொது 262(அ)விலும் பொது 265 வரும்) தமிழ் மொழி பெயர்ப்புகள் அனுப்பப்படும்.

பகுதிச் செயலாளரினால்/மேலதிக அரசாங்க அதிபரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரயாணச் செலவுகளுடன் கூடுதலாக தொழில்நுட்ப உத்தியோகத்தரொருவரினால் கட்டடமொன்று பார்வையிடப்படுவதற்கான கொடுப்பனவு 150/-ரூபாவாகும். ஒரே வருகையிலேயே பார்வையிடலொன்றை மேற்கொள்ளக் கூடிய விதத்தில் ஒழுங்குகள் செய்யப்படல் வேண்டும்.

ஒப்பம்: ஆர். அபேரத்ன.
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, மாகாண சபைகள்,
உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு